الدرس السابع
التيمم

பாடம் - 7
தயம்மும் செய்தல்

ஊரில் இருக்கும்போதும் பயணத்தில் இருக்கும்போதும் தயம்மும் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தயம்மும் என்பது உளுவுக்கு அல்லது குளிப்புக்குப் பகரமாகச் செய்ய வேண்டிய ஒன்றாகும். இது பின்வரும் காரணங்களுக்காகச் செய்யப்படும்.

**1.**தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் அல்லது தண்ணீர் இருந்தும் சுத்தம் செய்வதற்குப் போதுமாகாது என்றால் தயம்மும் செய்து கொள்ளலாம். ஆனால் முன்னதாக எங்கேனும் தண்ணீர் இருக்கிறதா? என்று தேடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் தயம்மும் செய்து கொள்ளலாம். அல்லது தண்ணீர் அருகில் இருந்து அதைத் தேடிச் செல்லும் போது தன் உயிருக்கோ பொருளுக்கோ ஊறு விளையும் என அஞ்சினால் தயம்மும் செய்து கொள்ளலாம்.

**2.**உளுவினுடைய உறுப்புக்களில் காயம் இருந்தால் அதைத் தண்ணீரால் கழுவுவதால் பாதிப்பு ஏற்படும் என்றால் ஈரக்கையால் தடவ வேண்டும். அதனாலும் பாதிப்பு ஏற்படும் என்றால் மற்ற உறுப்புக்களைக் கழுவி விட்டு அந்த உறுப் புக்காக தயம்மும் செய்து கொள்ள வேண்டும்.

**3.**தண்ணீர் அல்லது வானிலை கடும் குளிராக இருக்கும்போது தண்ணீரைப் பயன்படுத்துவதால் இடையூறு ஏற்படும் என அஞ்சினால் தயம்மும் செய்து கொள்ளலாம்.

**4.**தண்ணீர் இருந்தும் அது குடிக்கத் தேவைப்பட்டால் தயம்மும் செய்து கொள்ளலாம்.

## தயம்மும் செய்யும் முறை

முதலில் தயம்மும் செய்வதை மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும். பிறகு இரண்டு கைகளையும் பூமியில் ஒரு முறை அடித்து முகத்திலும் இடது கையை வலது புறங்கை மீதும் வலது கையை இடது புறங்கை மீதும் (மணிக்கட்டு வரை) தடவிக் கொள்ள வேண்டும்.

உளுவை நீக்கக்கூடிய காரியங்கள் அனைத்தும் தயம்முமையும் நீக்கிவிடும். மேலும் தயம்மும் செய்த ஒருவருக்கு தொழுகைக்கு முன்போ அல்லது தொழுது கொண்டிருக்கும்போதோ தண்ணீர் கிடைத்துவிடுமானால் தயம்மும் நீங்கிவிடும். தொழுது முடித்த பிறகு தண்ணீர் கிடைத்தால் அவரது தொழுகை நிறைவேறிவிடும். திருப்பித் தொழ வேண்டியதில்லை.